**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை**

அனுப்புநர்
மரு.J.இராஜமூர்த்தி MBBS, DCH.,
இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக
நலப்பணிகள் துறை,
சென்னை – 06.

பெறுநர்
அனைத்து மாவட்ட
இணை இயக்குநர்கள்
மருத்துவம் மற்றும் ஊரக
நலப்பணிகள் துறை,

**ந.க.எண்: 033230/தணி/2/2024 , நாள் : 31-7-2024**

அய்யா/அம்மையீர்,

பொருள்: தணிக்கை - உட்தணிக்கை – மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை – பணியமைப்பு தணிக்கை - மருத்துவ துறையில் பணியமர்த்தப்படுகிற இளநிலை மருத்துவர்களுக்கு சிறப்பு ஊதியம் தொகை ரூ 900/- மாதாந்திர ஊதியத்துடன் அனுமதிக்கப்படுவது – தணிக்கைத் தடைப் பத்திகள் எழுப்பப்பட்டது – தணிக்கைத் தடை தவறானதால் தற்போது இப்பொருள் குறித்த அனைத்து தடைகளையும் விலக்கிக் கொள்ளுதல் - தொடர்பாக

பார்வை: 1) அரசு ஆணை எண்: 304, நிதித் (ஊதியக்குழு) துறை, நாள்: 13.10.2017

*****

பார்வையில் காணும் அரசாணையின்படி, அரசின் அனைத்து துறைகளிலும் உள்ள சில வகை பதவியிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 13.10.2017 தேதி முதல் சிறப்பு ஊதியங்கள் அனுமதிக்கப்பட்டன.

அரசாணையில், **" IN ALL BRANCHES OF MEDICAL DEPARTMENT AND LOCAL BODIES"** தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள CIVIL SURGEONS, CIVIL ASSISTANT SURGEONS மற்றும் ASSISTANT PROFESSORS ஆகிய பதவிகளில் எதுவும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறையின் கீழ் உள்ள ASSISTANT SURGEON பதவியை குறிப்பிடவில்லை எனவும் அதனால் சிறப்பு ஊதியம் தொகை ரூ 900/- அனுமதிக்கப்பட இயலாது என பல்வேறு Regional Audit Parties மற்றும் இயக்குநரக உட்தணிக்கை அறிக்கைகளில் தடை எழுப்பபட்டுள்ளன.

Scanned with CamScanner

இத்தணிக்கைத் தடைகளின் சரித்தன்மை தற்போது மீண்டும் அரசின் (மாநில அரசு தணிக்கைத் துறையிலிருந்து) உட்தணிக்கை உதவி இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டது.

அரசாணையில் அனுமதிக்கப்பட்ட சிறப்பு ஊதியம் தொகை ரூ 900/- என்பது அரசின் அனைத்து துறையிலும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் கட்டுப்பாட்டிலும் உள்ள அனைத்து மருத்துவம் / மருத்துவ ஆய்வு / மருத்துவக் கல்வி என அனைத்து வகை நிறுவனங்களிலும் புதியதாக பணியமர்த்தப்படுகிற மருத்துவர்கள் / முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கும் பொருந்தும். இப்பொருள் குறித்து தணிக்கைத் தடைப்பத்தி எழுப்பத் தேவையில்லை என கருதி, ஏற்கனவே எழுப்பப்பட்ட தணிக்கைத் தடைப் பத்திகளை நீக்கம் செய்ய இதன் மூலம் அனுமதிக்கப்படுகிறது.

எனவே உரிய படிவத்தில் பதில்கள் அளித்து தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/-மரு.J.ராஜமூர்த்தி MBBS.,DCH.,**
**இயக்குநர்**
**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை**

**நகல்**

1) இணை இயக்குநர் (நிர்வாகம்),
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை,
சென்னை – 06.
2) நிதி கட்டுப்பாட்டாளர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை – 06.
3) முதன்மை கணக்கு அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை – 06.
4) உதவி இயக்குநர் (உட்தணிக்கை ),
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை – 06.
5) உதவி கணக்கு அலுவலர், மண்டல தணிக்கை குழு,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
காஞ்சிபுரம் / கடலூர் / திருச்சி / நாகப்பட்டினம் / தூத்துக்குடி / திண்டுக்கல் / இராமநாதபுரம் / திருப்பூர் / நாமக்கல்

**//உண்மை நகல்//**

31/7/24

**உதவி இயக்குநர்**
**(உட்தணிக்கை)**

Scanned with CamScanner